தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1969, மார்ச் 1

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 111 முதல் **118** வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

நடமாடும் மருந்தகங்கள்.

*119 **வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை நடமாடும் மருந்தகங்கள் **(Mobile Health Units)** செயல்படுகின்றன ?

(இ) பல நடமாடும் மருந்தகங்களில் வேன்கள் நீண்ட நாட்களாக பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) பதினொன்று.

(இ) & (உ) பழுதடைந்த மூன்று வேன்களை நீக்கி புதியன வாங்குவது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, அங்கே பழுதடைந்த வண்டிகளை சரிபார்ப்பதற்கு ஏறக்குறைய 3, 4 மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் சம்பந்தப்பட்ட டாக்டர்கள் அந்த யூனிட்டிலே பணியாற்றாமல் எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அந்த மருத்துவர்களை பிற மருத்துவ மனைக்குச் சென்று வேலை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூடுமானவரையில் எவ்வளவு விரைவிலே அவற்றைப் பழுதுபார்க்கமுடியுமோ, அந்த அளவிற்கு அந்தப் பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள். இதுவரையில் டாக்டர்கள் வேறு பல வாகனங்கள் மூலமாகத்தான் தங்கள் பணிகளை ஆற்றிவருகிறார்கள்.

திரு. சா.மெய்யப்பன் : ஹெல்த் யூனிட்டுகளிலே இருக்கிற பழுதடைந்த வேன்களை பழுது பார்ப்பதற்கு சர்க்கார் பஸ் பணிமனைகளிடம் ஒப்படைக்கின்ற யோசனை அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது பற்றிய தகவல் இப்போது இல்லை.

பின்தங்கிய வகுப்பினர் பட்டியல்

***120 வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் புதிதாக வகுப்பு எதுவும் சேர்க்கும் செயற்குறிப்பு அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(உ) அரசினர் அங்கீகரித்துள்ள பிற்பட்ட வகுப்பினர் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

(உ) 156.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப் பூண்டி, நாகப்பட்டினம் போன்ற வட்டாரங்களில் ஏறத்தாழ 30 கிராமங் களில் 15,000-த்திற்குக் குறையாத அளவில் "அச்சரை வேளாளர்கள்" வகுப்பினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் காலம் காலமாக எல்லாவற்றிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துவருகிறார்கள். அவர்கள் தங்களை பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர் கள் முன்னேற்றம் அடைய உதவி செய்யும் முறையில் அவர்களை பிற்பட்ட வகுப்புப் பட்டியலிலே சேர்ப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி அந்த வகுப்பை பிற்பட்ட வகுப்பு பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பம் அரசுக்கு வந்தது பற்றித் தகவல் இல்லை. ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பின்தங்கிய வகுப் பினர் பட்டியலைத் திருத்தவேண்டுமென்று கடந்த முறை மருத்துவக் கல்லூரியிலே சேர்க்க வேண்டுமென்று மாணவர்கள் தொடர்ந்த வழக்கின் மீது நீதிமன்றம் எத்தனையோ ஆண்டிற்கு முன்னால் அந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டது. ஆகவே, மீண்டும் பின்தங்கிய வகுப்பு பட்டியலைத் திருத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கிறது. அதன்படி இன்றைக்கு இந்த அரசாங்கம் அந்தப் பட்டியலைத் திருத்துவதற்காக யோசித்துக்கொண் டிருக்கிறது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் பட்டியலை மாற்றி அமைக்கவும், ஒரு சில ஜாதிப் பெயர்களை அதிலிருந்து விட்டுவிடவும் மத்திய அரசு மாநில அரசிடம் ஏதேனும் பரிந்துரை கேட்டதா ? அப்படியானால் மாநில அரசு அதற்கு என்ன பதில் அனுப்பியது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய அரசு இதுவரையிலும் அப்படி எதுவும் கேட்கவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : பிற்பட்ட வகுப்பினர், முற்பட்ட வகுப்பினர் என்று இருக்கிற காரணத்தினாலே, அரசாங்கத்தினுடைய சலுகை களைப் பெறவேண்டுமென்ற எண்ணத்தோடு முற்பட்ட வகுப்பினர்கூட தங்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலே சேர்த்துக்கொள்ளவேண்டு மென்ற முயற்சி நடைபெறுகிறது. இதைப் போக்குவதற்கு பொருளா தார அடிப்படையிலே யார் யாருக்குச் சலுகை கொடுக்கவேண்டுமோ, அந்த அடிப்படையிலே சலுகைகள் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இனத்தின் அடிப் படையிலேயும் பொருளாதார அடிப்படையிலேயும் அப்படிப்பட்ட ஏற்பாடு கள் செய்யப்படுகின்றன. இன்றைக்குள்ள சூழ்நிலையில் இந்தப் பட்டியலை மேலும் பரிசீலனை செய்யவேண்டுமென்ற நிலையையொட்டி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பன்னெடுங்காலமாக பின்னடைந்த வல்லம்பர் என்ற வகுப்பைப் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசு அன்னார் நலம் பெறும் வகையில் பின்தங்கிய பட்டியலிலே சேர்க்க முன்வருமா ?

1969 மார்ச் 1]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லையென்றாலும், இன்றைக்கு இருக்கிற பட்டியலைத் திருத்துவதுபற்றி ஹைகோர்ட் கூறி இருக்கிறார்கள். இதைப் பற்றி மத்திய அரசு எதும் கூறவில்லை. இந்த பட்டியலைத் தயாரிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததே தவிர மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தது அல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர்களின் பட்டியலில் உள்ளவர்களில் எந்தெந்த பின்தங்கிய வகுப்பினர்கள் தங்களை மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள்? அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. எம். சுரேந்திரன்: பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலே "கொண்டாரெட்டி" வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்கள் பச்சை மாமிசத்தைத் தின்பவர்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் அந்த ஸ்தலத்திலே இல்லை என்று தாசில்தார் சொல்லுகிறார். அது அப்படித்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ந. ராஜாங்கம் : தலைவர் அவர்களே, சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னால் டில்லியிலிருந்து பார்லிமெண்ட் சப் கமிட்டி வந்தது. வந்தபோது சலவைத் தொழிலாளர்கள் தங்களை தாழ்த்தப்பட்ட வகுப்பு பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன்மீது விசாரணையும் நடத்தினார்கள். நமது அரசு அதன்மீது என்ன பரிவுரை செய்தது? அதனுடைய நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய அரசு இதுகுறித்த எந்தத் தகவலும் கேட்கவில்லை. மத்திய அரசின் சார்பிலே தான் இந்தக் குழு வந்தது. இதை மத்திய அரசுதான் செய்யவேண்டும் மாநில அரசை அவர்கள் எதுவும் கேட்கவில்லை.

திரு. இல. பலராமன் : பின்தங்கிய வகுப்பினராக அரசாங்கத்து பட்டியலிலே சேர்ப்பதற்கு என்னென்ன விதிமுறைகள் தமிழ் நாட்டு அரசு சேர்த்திருக்கிறது ? மத்திய அரசுக்கு எந்தெந்த பின்தங்கிய வகுப்பினரை பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முழுத் தகவல் என்னிடத்தில் இல்லை என்றாலும் பொதுவாகப் பின்தங்கிய நிலையைப் பார்த்தும், பொருளாதார அடிப்படையைப் பார்த்தும் பின்தங்கிய வகுப்பு பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்று அறிகிறேன். தனிக்கேள்வி போட்டால் முழுத் தகவலும் கொடுக்கலாம்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலே "வீரகுடி வேளாளர்" என்ற ஒரு வகுப்பினர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் தஞ்சை ஜில்லாவில் மட்டும்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், மற்ற மாவட்டத்திலே அந்த பெருங்குடி மக்களுக்கு எந்தவிதமான கன்சஷனும், ஸ்காலர்ஷிப்பும் தரப்படுவதில்லை. ஆகையால் எல்லா மாவட்டங்களிலும் உள்ள "வீரகுடி வேளாளர்"வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அப்படிப்பட்ட எல்லாச் சலுகைகளும் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எங்கே இருந்தாலும் அந்த சலுகைகளைப் பெற அவர்கள் உரிமை உடையவர்கள். குறிப்பிட்ட மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் என்றல்ல. தாங்கள்

குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று தக்க சான்று கொடுக்கப் பட்டால் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் சலுகை பெற தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட பட்டியலிலே உள்ள சிலரை பிற்பட்ட வகுப்பிற்கு மாற்றவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசிடம் யோசனை கேட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட எந்த யோசனையும் மத்திய அரசு மாநில அரசைக் கேட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையில் பின்தங்கியவர்களுக்கு உதவி வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பார்க்கும்போது, எந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைக் காட்டிலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுடைய வருவாய்தான் மிகக் குறைவு? ஆகவே, அவர்களுடைய மக்களுக்கும் அந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சமூக அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும்தான் இந்த இனங்கள் பாகுபடுத்திப் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் சொன்னேன். விவசாயம் என்ற தொழிலை வைத்து இந்த இனத்தைப் பிரிக்கவில்லை. பொருளாதார அடிப்படையும், சமுதாயத்தில் அந்தந்த மக்களுக்கு இருக்கும் நிலைமைகளையும் வைத்துத் தான் இந்தப் பட்டியலைத் தயார் செய்திருக்கிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். "விவசாயிகளுடைய மக்கள்" என்று நான் குறிப்பிடவில்லை. "விவசாயத் தொழிலாளர்களுடைய மக்கள்" என்றுதான் குறிப்பிட்டேன். "விவசாயிகள்" என்று சொன்னால்தான், அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி,விவசாயத்தில் ஈடுபடும் எல்லோரையும் குறிக்கக்கூடும். "விவசாயத் தொழிலாளர்களுடைய மக்கள்" என்று நான் கூறினேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : "விவசாயத் தொழிலாளர்கள்" என்று ஒரு இனம் இருப்பதாக நான் கருதவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, அச்சுக்கார வேளாளர் என்பவர்கள் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். தச்சுத் தொழில் செய்துகொண்டிருப்பதால் அவர்களுக்கு "தச்சுக்கார வேளாளர்கள்" என்று பெயர் வந்திருக்கிறது. ஒதுக்கப்பட்ட இடத்திலே தான் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அளிக்கப்படவில்லை. அவர்களும் தாழ்த்தப் பட்ட இனத்தவர்களாகவே வாழ்ந்துவருவதால், அவர்களையும் தாழ்த்தப் பட்டவர்கள் இனத்தில் சேர்த்து, எல்லாச் சலுகைகளும் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சமூகத்தின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி நான் கூற முன்வரவில்லை. ஆனால், தாழ்த்தப்பட்டவர் கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்ட வேண்டுமென்றால், தீண்டாமை என்னும் கொடுமைக்கு அவர்கள் ஆளாகியிருக்க வேண்டும். அப்படிப் பட்ட இனங்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : வேறு பல மாநிலங்களில் சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்திருப்பதைப் போல, இங்கும் அவ்வாறு சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட

நாட்களாகவே இருந்து வருகிறது. அதேபோல், மீனவர்கள், சிகை அலங்காரம் செய்யும் தொழிலாளர்கள் ஆகியோர்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு எப்பொழுது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தப் பட்டியல் தயார் செய்ததே மத்திய அரசாங்கம். வேறு பல மாநிலங்களில் சலவைத் தொழிலாளர் மக்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதாகக் கனம் உறுப்பினர் கூறுவது மிகவும் உண்மைதான். ஆனால், அந்த மாநிலங்களில் சலவைத் தொழிலாளர் மக்கள், இந்தத் தீண்டாமை என்கிற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் அந்த மக்கள் தீண்டாமை நிலைமைக்கு ஆளாக்கப்படாத காரணத்தால் அவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதியற்றவர்கள் என்று மத்திய அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, the Supreme Court, in two cases, have held that religion could not be the basis or the sole test for the classification of a class of people as belonging to a backward community. But in this State if a person becomes a convert to Christianity or some other religion, immediately he is classified as a person not belonging to a backward community but as belonging to a forward community. So, may I request the Hon. Minister to state that atleast in view of the judgment of the Supreme Court and also the judgment of the Madras High Court that religion could not be the sole test for the classification of a class of people as belonging to a backward community, will this Government take steps to remove that disqualification hereafter?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதம் மாறிய கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகத்தான் கருதப்படுகிறார்களே தவிர, முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக அரசாங்கத்தால் கருதப்படவில்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : ஐயா, நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை மாற்றியமைக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா ? வருவாய் அடிப்படையில் சலுகைகள் அளிக்கப்படும் என்று தற்போதுள்ள நிலைமையை மாற்றியமைத்தால்தான் முற்போக்கு சமுதாயத்திலேயிருக்கக் கூடிய மிகப் பரம ஏழைகள்கூட ஓரளவு படிக்கவும் மற்ற சலுகைகளைப் பெறவும் முடியும். ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலேயே வருவாய் அடிப்படையில் சலுகை அளிக்கும் வகையில் திட்டத்தை மாற்றியமைத்தால் மற்றவர்களுக்கும் அந்தப் பயன் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதைப்பற்றி இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தப் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சேர்ந்தது அல்ல. மத்திய அரசாங்கம்தான் அவைகளைச் செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்திலிருந்து தாக்கீது வந்தால்தான் மாநில அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. ம. பொ. சிவஞானம் : கிராமணி சமூகத்தாரிடமிருந்து, அந்த சமூகத்தை "மிகவும் பிற்பட்டவர்" பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று மனு வந்ததா ? வந்திருந்தால், அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட ஒரு மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஆனால், அதைக் குறித்து இன்னும் அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, உத்தியோகங்களிலும் இதர துறைகளிலும் 16 சதவீத இடம் ஒதுக்கப்படுகிறது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்கு அந்த 16 சதவீதமே சரியாகப் பூர்த்திசெய்யாத நிலையிலேதான் இருந்து கொண்டு வருகிறது. ஏறத்தாழ 5 அல்லது 6 சதவீதம் தான் பூர்த்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது. அவைகளைப் பரிசீலித்து அந்த 16 சத வீத இடத்தைப் பூர்த்தி செய்வது எப்படி என்பதைக் குறித்து ஆராய ஒரு ஹை பவர் கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி இன்றைக்கு எல்லாத் துறைகளிலேயும் இந்தச் சமுதாய மக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள், மேலும் எத்தனை பேருக்கு உயர்வு தர முடியும் என்பதை யெல்லாம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. 16 சத வீதமே பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால், அதை உயர்த்துவது என்பது சாத்தியம் அல்ல.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அகமுடையர் என்று ஒரு வகுப்பு இருக்கிறது. பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் "அகமுடையர்" என்று இருக்கிறது. என்றாலும், அரசாங்கத்தினிடம் சலுகைகளைப் பெற மனுக்கள் போடும்போது, "அகமுடையன்" என்பதற்கு பதிலாக "அகமுடையர்" என்று போட்டிருக்கும் காரணத்தால் பலருக்குச் சலுகை கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த "இன்" "இர்" வேறுபாட்டைப் போக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : "அகமுடையன்" "அகமுடையர்" என்கின்ற வேறுபாட்டைப்பற்றி இதுவரையிலும் அரசாங்கத்திற்கு எந்தவித புகாரும் வரவில்லை. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி கூறுகிறார். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும்.

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்போரேஷனுக்குக் கடன்.

*121 வினா—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், புலியூரிலுள்ள செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷனுக்கு அரசினர் எவ்வளவு ரூபாய் கடன் தந்துள்ளனர் ?

(இ) அதை எப்போது திருப்பித்தரப்பட வேண்டும் என வரைமுறை ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷனுக்கு அரசினர் கடன் ஏதும் கொடுக்கவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை.

*122 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1966–67-ஆம் வருடத்தில் கிடைத்த லாபம் என்ன ?

(இ அதில் பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை 1966–67-ம் ஆண்டில் ரூ. 2,17,107·10 நஷ்டம் அடைந்தது.

(இ) கேள்விக்கு இடமில்லை.